## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.
## அசல் வழக்கு எண்.110/2013

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.2ன்** வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திருமதி.S.சுசீலா, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம், என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. வெங்கடேஷ் | வட்டம் | : | |
| த/பெ. | : | | மாவட்டம் | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |

**வா.சா.2 : முதல் விசாரணை**:

நான் இவ்வழக்கின் 3ம் தரப்பினர் ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2, 6, 8, 9, 11 முதல் 13 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**1)** நான் பெருமாள் மகன் வெங்கடேசன் என காட்ட ஆவணம் உள்ளதா என்றால், உள்ளது. கொண்டுவரவில்லை. நான் 1–ம் வாதி தேன்மொழி அழைத்ததன் பெயரில் சாட்சியம் அளிக்க வந்தேனா என்றால், இல்லை. நான் தனித்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பிரமாண பத்திரிக்கையில் உள்ள விவரங்களை எங்கு, யாரிடம் குடுத்து தயார் செய்யப்பட்டது என்றால், வாதியின் வழக்கறிஞர் மூலமாக தயார் செய்யப்பட்டது. பிரமாண பத்திரிக்கை தயார் செய்யப்பட்டிருந்ததில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால், சரிதான். படித்துப் பார்த்துவிட்டு கையொப்பம் செய்தேன். பாரா 1–ல் வாதிகள் எனக்கு உறவினர் என கூறியுள்ளேன் என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி சின்னசாமி எனது பெரியப்பா ஆவார். 1–ம் வாதியின் கணவர் அன்பழகன் எனக்கு அண்ணன் முறை ஆவார். வாதிகள், பிரதிவாதிகள் மீது என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால், தெரியும். அசல் ஆவணங்களை கொடுக்க வேண்டும் என வழக்கு தாக்கல் செய்துள்ளார், சேகர் பெயரில் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் குறித்தும், வாதியின் பெண்

மகளான பிருந்தாவை அவருடன் அனுப்பி வைக்க வழக்கு தாக்கல் செய்துள்ளார். 1-ம் பிரதிவாதி யெரில் வழங்கப்பட்ட பட்டாவை பார்த்துள்ளேனா என்றால், இல்லை. எனவே, சொத்து 1-ம் பிரதிவாதிக்கு பட்டா வகையில் பாத்தியப்பட்டதா, கிரைய வகையில் பாத்தியப்பட்டதா என உறுதியாக சொல்லமுடியாது என்றால், சரிதான்.

2) 2008-ம் வருடம் 1-ம் பிரதிவாதியின் கணவர் அன்பழகன் பெயருக்கு எழுதி வைத்த ஆவணத்தை தற்போது பார்த்துள்ளேனா என்றால், இல்லை. முன்பு பார்த்துள்ளேன். எப்போது மேற்படி ஆவணத்தை பார்த்தேன் என்றால், 2009-ல் பார்த்தேன். அன்பழகன் என்னிடம் காண்பித்தார். அன்பழகன், தங்கவேல் மகன் ரவியிடம் பணம் ரூ.50,000/-ம் வாங்கியபோது, நான் உடன் இருந்தேன். ஆனால், சாட்சி கையொப்பம் செய்யவில்லை. அவர் எங்கு பணம் வாங்கினார் என்றால், சத்தியமங்கலத்தில் உள்ள அன்பு பைனான்ஸ் நிறுவனத்தில் வாங்கினார். அன்பு பைனான்ஸ் கோபி ரோட்டில் உள்ளது. மேற்படி கடனுக்கு முறையாக வட்டி செலுத்தி வந்தாரா என்ற விவரம் தெரியுமா என்றால், தெரியும். செலுத்திவந்தார். எனது பிரமாண பத்திரிக்கை பாரா-5-ல் கடனை திருப்பி செலுத்திவிட்டு, 3, 4 பிரதிவாதிகளிடம் இருந்து, மேற்படி ஆவணங்களை ஒப்படைக்காததற்கு வாதி சென்னை, டி.ஜி.பி அலுவலகம் மற்றும் ஈரோடு மாவட்ட காவல்கண்காணிப்பாளர் அலுவலகம், சத்தியமங்கலம் துணை காவல்கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் புகார் கொடுத்தார். புகாரின் மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. அன்பழகனுக்கு எழுதிக் கொடுத்த ஆவணத்தைப் பொறுத்தவரையில், அசல் ஆவணங்களை ஒப்படைக்காமலும், நடைமுறைக்கு வராமலும் இருந்ததால், மேற்படி சொத்தைப் பொறுத்து அவர் மற்றொரு மகனான 2-ம் பிரதிவாதி ராஜேந்திரனுக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை 1-ம் பிரதிவாதி எழுதிவைத்த விவரம் அனைத்தும் தெரிந்துகொண்டே வாதிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வாதி ஒருபோதும் தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்தது இல்லை என்றால்,சரியல்ல. எனவே, தாவா சொத்தில் வாதியின் அனுபவத்தினை 2013-ல் பிரதிவாதிகள் தடுத்தார்கள் என்பது உண்மையல்ல என்றாலும் சரியல்ல. 2-ம் பிரதிவாதி ராஜேந்திரன் பெயரில் இருந்த சொத்துக்களை யாருக்கு விற்றார் என்றால், 14-ம் பிரதிவாதி சண்முகத்திற்கு விற்றுள்ளார். மேற்படி சண்முகம் பெயரில் உள்ள ஆவணத்தை நான் பார்க்கவில்லை. மேற்படி சண்முகம்தான் தாவா சொத்தில் அனுபவத்தில் உள்ளார் என்றால், சரியல்ல. வாதிதான் அனுபவத்தில் உள்ளார். வழக்கு நிலுவையில் உள்ளபோது, தாவா சொத்தை ஒரு பகுதியை விற்பனை செய்த விவரம் தெரியுமா என்றால், தெரியாது. வாதியின்

மகள் பிருந்தா விற்பனை செய்த விவரம் தெரியுமா என்றால், தெரியும். மேற்படி பிருந்தா கணேசன் என்பவருக்கு விற்பனை செய்தார். மேற்படி விற்பனை விவரங்களை எனது பிரமாண பத்திரிக்கையில் கூறவில்லை என்றால், சரியல்ல. கூறியுள்ளேன். நான் வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.03.10 21:39:51 +0530

District Munsif